# ஜோன் கல்வின்

## சீர்திருத்த இறையியலின் தந்தை

ஆர். பாலா

RP
REFORMED PUBLICATIONS
சீர்திருத்த வெளியீடுகள்

**ஜோன் கல்வின்**
**- சீர்திருத்த இறையியலின் தந்தை -**

*ஆர். பாலா*

*முதல் பதிப்பு: மார்ச் 2017*

*கிடைக்குமிடம்:*

**சீர்திருத்த வெளியீடுகள்**
*6/87 காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம்,*
*சென்னை 600023.*
*தமிழ்நாடு, இந்தியா.*
*தொலைபேசி: 9445671113*
*ஈமெயில்:* rpchennai23@gmail.com

*கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த மேலதிக தகவல்களுக்கு* www.biblelamp.org *வலைப்பூவைப் பார்க்கவும்.*

# அர்ப்பணம்

*சீர்திருத்தவாதியான மார்டின் லூத்தர் ஜெர்மனியில், 1517ல் விட்டன்பேர்க் திருச்சபைக் கதவில் கத்தோலிக்க மதத்திற்கெதிரான தன்னுடைய 95 அம்சக் குறிப்புகளைப் பதித்தார். அதன் 500வது நினைவாண்டு அக்டோபர் 2017. அதை நினைவுகூருமுகமாக இந்நூல் வெளிவந்திருக்கிறது. இதைத் திருச்சபை சீர்திருத்தத்திற்காகத் தாழ்மை யோடும், தங்களை இழந்தும் பணிபுரிந்த அனைத்து சீர்திருத்தவாதிகளுக்கும் அர்ப்பணிக்கிறேன்.*

# பொருளடக்கம்


*1. நுழைவாயில்........................................................................7*

*2. பிறப்பும் வளர்ப்பும் படிப்பும்......................................17*

*3. திருச்சபை சீர்திருத்தம்..........................................................27*

*4. கிறிஸ்தவ இலக்கியப் பணி............................................44*

*5. கிறிஸ்தவ போதனைகள்...................................................51*

*6. இறுதிக் காலம்........................................................................74*

*7. கல்வின் விட்டுச்சென்ற செல்வங்கள்...................80*

*8. கல்வின் காட்டும் வழி.........................................................93*

# நுழைவாயில்

*1517ல் திருச்சபை வரலாற்றில் ஏற்பட்ட திருச்சபை சீர்திருத்தத்தில் முக்கிய பங்காற்றியவர் மார்டின் லூத்தர். அப்பணியில் கர்த்தரால் பயன் படுத்தப்பட்ட ஒரு கருவியாக அவர் இருந்தார். அந்த சீர்திருத்தத்தின் மூலம் வேதத்தில் இருந்து வெளிக்கொணரப்பட்ட சீர்திருத்த போதனை களுக்கும், இறையியலுக்கும் உருவம் கொடுத்து வளர்த்த மனிதனாக ஜோன் கல்வினைக் கர்த்தர் பயன்படுத்தினார். லூத்தர் சபை சீர்திருத்தத்திற்கு அடித்தளம் அமைத்தார். கல்வின் அதன்மூலம் வெளிவந்த போதனைகளுக்கு உருவம் கொடுத்தார்.*

*சீர்திருத்தவாதிகளில் ஒருவரான ஜோன் கல்வினைத் தவறாகப் புரிந்துகொண்டிருப்பவர்கள் அநேகர். அவருக்கு ஏற்பட்ட நிந்தனைகளுக்கு எண்ணிக்கை இல்லை. இருதயமில்லாத இறையியல் அறிஞர் என்று அடிக்கடி அவரை வர்ணித்திருக்கிறார்கள். ஆனால், அது உண்மையே அல்ல. நெகிழ்ந்த இருதயத்தைக் கொண்டு கிறிஸ்து*

இயேசுவின் ராஜ்ய விஸ்தரிப்பை மட்டுமே கண்ணுங் கருத்துமாக வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டிருந்து பணியாற்றியவர் ஜோன் கல்வின். திருச்சபை சீர்திருத்தப் பணியில் தன்னையே எரித்துக்கொண்டவர் கல்வின். அவருடைய இருதயம் கிறிஸ்துவுக்கு மட்டுமே சொந்தமானதாக இருந்தது.

கல்வின் மிகப் பெரிய படிப்பாளி. சீர்திருத்த போதனைகளைத் தொகுத்து அதை மனிதர்கள் அறிந்துகொள்வதற்கு பெரும் பணிசெய்த, தேவனாலே பயன்படுத்தப்பட்ட ஒரு மனிதன். சீர்திருத்த சபைகளில், வருடந்தோறும் ஜூலை 10ம் நாள் ஜோன் கல்வினின் பிறந்த நாளாக நினைவுகூரப்படுகிறது; பண்டிகையாக இதைக் கொண்டாடுவதற்காகவோ அல்லது கேளிக்கை விருந்து வைக்கவோ அல்ல. திருச்சபை வரலாற்று நிகழ்வுகளை நாம் நினைவுகூரவேண்டும் என்பதற்காகவும், நம்முடைய மக்கள் நடந்த




**கல்வினின் 500வது பிறந்த நாள் நினைவாக வெளியிடப்பட்ட பதக்கம்**


*காரியங்களை மறந்துவிடக்கூடாது என்பதற்காகவும், நம்முடைய இளம் தலைமுறையினர் அந்த மனிதர்கள் செய்த தியாக உழைப்பைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும், எதிர்காலத்திலே அதேவிதமாக நாமும் சத்தியத்தைக் காத்துக்கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதற்காகவும் கருத்தரங்குகள் வைத்திருப்பார்கள்; சபைகளில்கூடப் போதனைகள் அளித்திருப்பார்கள்.*

*அப்போஸ்தல நடபடிகள் 9 வது அதிகாரத்தை எடுத்துப்பார்த்தால் 9:15, 16 வசனங்களிலே அங்கு கர்த்தர் அனனியாவிடம் சொல்லுகிறார், 'நீ போ, (அங்கு எழுதியிருக்கிறபடி என்னுடைய மொழியில் சொல்லுகிறேன்), அவன் என்னால் பயன்படுத்தப்பட்ட ஒரு கருவியாக இருக்கிறான். புறஜாதிகள் மத்தியிலே அவன் என்னுடைய பெயரை எடுத்துச் சொல்லப்போகிறான். புறஜாதியார் மத்தியில் மட்டுமல்ல இஸ்ரவேல் மத்தியிலும் என்னுடைய பெயரை எடுத்துச்சொல்ல அவனைப் பயன்படுத்தப் போகிறேன். அந்த மனிதனுக்கு தெரியப்படுத்துவேன், எந்த அளவிற்கு அவன் எனக்காகத் துன்பப்படவேண்டும் என்பதை அவன் அறிந்துகொள்ள வேண்டும்' என்று பவுலைக் குறித்து கர்த்தர் அங்கே சொல்லுவதைப் பார்க்கிறோம். ஆனால் அந்த வசனம் ஜோன் கல்வினைப் பொருத்த அளவிலே நிச்சயமாகப் பொருந்தும். பவுல் தான் பட்டபாடுகளையும் துன்பங்களையும், கஷ்டங்களையும் விபரித்து எழுதவில்லையா? பவுல் அன்று கர்த்தராலே பயன்படுத்தப்பட்ட ஒரு மனிதன். அதேவிதமாக 16ம் நூற்றாண்டிலே*

# 1
# பிறப்பும் வளர்ப்பும் படிப்பும்

*1509 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 10 ஆம் தேதி பிரான்சிலே பாரிஸ் நகரத்திற்கு வடகிழக்கு பகுதியிலிருந்த நோயோன் (Noyon) என்ற இடத்தில் ஜோன் கல்வின் பிறந்தார். அது பாரிஸ் தலைநகரத்தில் இருந்து வடபகுதியில் 60 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. கல்வினுடைய தகப்பன் ஜெராட் நோயோனில் இருந்த பிஷப்புக்கள் நடத்தி வந்த ஆபிஸில் வேலை செய்து வந்தார். ஜோன் கல்வின் பிறந்தபொழுது மார்டின் லூத்தருக்கு வயது 26 ஆக இருந்தது. இருபத்தி ஆறு வயதிலேயே அவர் விட்டன்பேர்கில் இறையியல் போதித்துக் கொண்டு இருந்தார். அப்போது இன்னுமொரு சீர்திருத்தவாதியாக சுவிட்ஸர்லாந்தில் இருந்த சுவிங்கிலிக்கு லூத்தரைவிட இரண்டு வயதுதான் குறைவாக இருந்தது. மார்டின் லூத்தருடைய நண்பரும் சீடருமாக இருந்த பிலிப் மெலாங்தனுக்கு கல்வினைவிட 12 வயதுதான் கூடுதலாக இருந்தது.*


மார்டின் லூத்தர்


பிலிப் மெலாங்தன்


சுவிங்கிலி

*கல்வினுக்கு எட்டு வயதாக இருந்தபொழுது மார்டின் லூத்தர் கத்தோலிக்க மதத்திற்கு எதிரான தன்னுடைய 95 குறிப்புகளை விட்டன்பேர்க் திருச்சபைக் கதவில் ஆணி அடித்து பதித்தார். கல்வினுக்கு அப்போது எட்டே வயதுதான். இதிலிருந்து இந்த சீர்திருத்தவாதிகள் எல்லோரும் கல்வின் சிறுவனாக இருந்தபோது வாலிப வயதில் மாபெரும் பொறுப்பாகிய திருச்சபை சீர்திருத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளுகிறோம். இதிலிருந்து வாலிப வயதை நாம் குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். நம்மினம் வாலிபர்களை மதிப்பதில்லை அவர்களை எப்படி வளர்க்கவேண்டும் என்பதில் தவறிழைத்துவிட்டு அவர்களை உதாசீனப்படுத்துவது எதிர்காலத்துக்கு நல்லதல்ல. அவர்களுக்கு பெரியவர்கள் உதாரணமாக இருக்கவேண்டும். வாலிப வயதில் சீர்திருத்தவாதிகள் பெரும் பணிகளில் ஈடுபட்டதற்குக் காரணம் அவர்களை வளர்த்தவர்கள் அதில் குறைவைக்காததுதான். வாலிபர்களும் வாலிப வயதை வீணடித்துக்கொள்ளக்கூடாது. இன்றைக்கு வாலிபர்களின் கவனத்தைத் திருப்ப பிசாசு*

# 3
# கிறிஸ்தவ இலக்கியப் பணி

ஜோன் கல்வின் தனக்கு 26 வயதாக இருந்தபோது தன்னுடைய முறைப்படுத்தப்பட்ட இறையியல் நூலான 'இன்ஸ்டிடியூட்டை' எழுதினார். கல்வின் தத்துவரீதியில் தெளிவாக எழுதக்கூடிய அருமையான எழுத்தாளராகவும் இருந்தார். கல்வினின் இந்த இறையியல் நூல் பலதடவைகள் அவரால் புதுப்பிக்கப்பட்டு உலகின் பல மொழிகளில் பல பதிப்பாளர்களால் வெளியிடப்பட்டு விற்பனைக்கு இருக்கிறது. 1550ல் இருந்து 1559ம் ஆண்டு வரையிலும் கல்வின் அதை மறுபடியும், மறுபடியும் புதுப்பித்திருக்கிறார். இதன் முதலாவது பதிப்பு இலத்தீன் மொழியில் 1536ம் ஆண்டு பேசில் நகரில் வெளியிடப்பட்டது. இதில் ஆறு அதிகாரங்கள் இருந்தன. இதன் இரண்டாம் பதிப்பு 1539ம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதில் பதினேழு அதிகாரங்கள் இருந்தன. அதற்கு அடுத்து வந்த பதிப்பு 1543ல் வெளியிடப்பட்டது. அதில்

# 7
# கல்வின் காட்டும் வழி

*இதுவரை நாம் ஆராய்ந்து பார்த்திருக்கும் ஜோன் கல்வினின் வாழ்க்கையில் இருந்து நாம் அடைய வேண்டிய பயன்பாடுகளை சிந்தித்துப் பார்ப்போம்.*

***1. கல்வினைப்போல தேவனுடைய வார்த்தைக்கு மட்டுமே நாம் முக்கியத்துவமளிக்க வேண்டும்.***

*16ம் நூற்றாண்டு திருச்சபை சீர்திருத்தம் இதை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. அன்றிருந்த மாபெரும் பஞ்சம் சத்தியப் பஞ்சமே. கல்வினுடைய வாழ்க்கையும், பிரசங்க ஊழியமும் எழுத்துக்களும் அவர் சத்திய வேதத்திற்குக் கொடுத்திருக்கும் பேரிடத்தை அப்பட்டமாக நமக்கு விளக்குகின்றன. இன்று வேதம் உலகின் பல மொழிகளில் இருக்கின்றது. நம்முடைய தமிழ் மொழியில் வேதம் நல்ல முறையில் மொழிபெயர்க்கப்பட்டதாக*




கல்வினின் நினைவாக
வெளியிடப்பட்ட தபால் தலை




கல்வினுடைய
மனைவியின் நினைவாக
வெளியிடப்பட்ட தபால்
தலை




திருச்சபை சீர்திருத்தத்தின் 500வது வருடத்தை
நினைவுகூருமுகமாக வெளியிடப்பட்டுள்ள
கல்வின் மற்றும் சுவிங்கிலியின் உருவம்
பதிக்கப்பட்ட நாணயம்